முருகப்பெருமான் துணை

# மகான் கொங்கணேஸ்வரர் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.06.2023, புதன்கிழமை

1. தருமனே ஞானத் தலைவனே
தவபலம் அனைத்தும் திரட்டி
தருமசாலை அமைத்து உலகில்
தருமம் வளர்க்கும் அரங்கனே
2. அரங்கனே உமை போற்றி நன்கு
அருளுவேன் அறிவுரை ஆசி
வரங்களாக சோபகிருது விடைதிங்கள்
வல்லமைபட அறுநான்கு திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 24 ம் நாள், 07.06.2023, புதன்கிழமை)
3. வாரமதில் கொங்கணேஸ்வரர் யானும்
வழங்குவேன் உலக நலம் பெற
சோரமிலா ஞானவான்கள் ஆக
சுத்த நெறி கொண்டு உலக மக்களை
4. மக்களை மாற்றும் ஞானவழி
மகத்துவம்பட அருளும் அரங்கனை
தேக்கமின்றி மக்கள் வணங்கி
தொடர்ந்து ஏற்று வருதலுற
5. வருதலுடன் அரங்கன் தரும
வழிமுறைகளை ஏற்று நன்கு
தருமசாலைகளை கிளைகளாக
தரணியெங்கிலும் நிறுவி நன்கு
6. நிறுவி நன்கு தருமம் வளர்த்து
நீதிபட தொண்டாற்றி வருக
ஆறுமுகனார் கடாட்சமான ஞானி
அரங்கன் வழி திருகடாட்சம் தானும்
7. தானாக உலகோர்க்குக் கிட்டி
தரணியில் பெருமாற்றம் நிகழும்
ஞானமாக எங்கும் பரவியே
ஞானவான்கள் எனும் தகுதி கூடி

8. கூடியே உலக மக்களிடை
குருபக்தியில் உறுதி கண்டிட
தேடியே ஆறுமுகனார் காட்சி
தெய்வ நெறிப் பிறழா வாழ்வாக

9. ஆகவே மக்களெல்லாம் தேறி
அழிவை தடுக்கும் சக்திகளாக
வகைபட மரணம் வெல்லும்
வல்லமை மிக்க ஞானிகளாக

10. ஆகவே நிலைகள் கூடியே
அற்புதம் உலகம் கண்டடையும்
வகைபட எல்லா சக்திகளும்
வரவேற்று வழிநடத்தும் வண்ணம்

11. வண்ணமுடன் வளர்ச்சி மாற்றம்
வையகம் கண்டுத் தேற்றம்
உண்மைமிக்க பாதுகாப்பு நிறைந்த
உயர்தலைமை கண்டுத் தேறும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—